959

உ

சிவமயம்.

27 MAY 193

கரிகாலி மாரியின்

கலிகாலக்காக்ஷிச் சிந்துகள்.

இஃது

கனதன பெரியோர்கள்

உத்திரவுக்கிணங்க,

சிலோன் குஞ்சுபரி சுவாமிகள்

கரிகாலி மிராஸ்தார் கனம் ராம அய்யரவர்கள்

வேண்டுகோளுக்கிணங்க,

திருச்சி ஜில்லா, முசிரி தாலூகா,

[illegible]ம் டீச்சர் & நேடிவ் டாக்டர்

[illegible] சுவாமி அய்யரால்

[illegible]ப்பெற்றது.

Q25:417 N31 186163

[illegible]தா பிரஸ். துறையூர்.

1931.

உ

ஸ்ரீ சிவபெருமான் றுணை.

கரிகாலி மாரியின் கலிகால காக்ஷிகள்.

வெண்பா.

அன்னம் உடை ஆபரணம் நீயளித்தாய்
எண்ணியே உன்பாதம் நண்ணிவந்தேன்—என்வினைபோம்
கண்ணின் மணியே கற்பகமே கருத்தில்வந்த
வண்மையுள்ள கரிகாலி மாரியே.

7 MAY 1931

பஞ்சவர்ன மயில் என்ற மெட்டு.

எண்சாண் உடம்பைநல்ல பஞ்சுபுடவை போல
எண்ணி யழுக்கை நீக்குவீர் தினங்குளித்து
இன்பசுகமு மாக்குவீர்

அன்னையே அம்மாவுன்னை அன்புடன் போற்றினேன்
இன்பமுடனே காக்கவா உலகமாதா
அன்புடன் ரக்ஷிக்க வாவா. (1)

திருச்சி முசிரிநகர் சேர்ந்திடும் கரிகாலி
ஜெயங்கொண்ட மாரியம்மைநீ செல்வர்கள்முகம்
தீர்க்கமாய் காத்திட வாவா. (2)

காசிகாஞ்சி கண்ணனூர் கரிகாலி வாழுமாரி
கண்மணி முகங்கள் பார்க்கவா உன்னருள்தாதா
கல்வியைப் பெருகச் செய்யவா. (3)

உன்னைவிட மாதர்கள் உலகத்திலில்லை சொல்வேன்
உத்தமிநீ காத்திட வாவா உன்சொரூபத்தை
அன்புடன் சொல்வேனே வாவா. (4)

உலகினில் உந்தன் கோவிலில்லா ஊருமில்லை
உத்தமி நாங்கள் சொல்லுவோம் சித்தமகிழ்ந்து
நித்தமும் காத்திட வாவா. (5)

பிறந்தநாள் முதலாக பிரியமாய்க் காத்தவள்நீ
பெற்றதாய் நீயே யாகுமே மாரியுமையே
பெருமையாய்க் காத்திட வாவா. (6)

கண்ணில்லா குருடர்க்கு கண்கள் கொடுத்தமாரி
காதில்லா செவிடர்க்குமே காதைக் கொடுத்த
கரிகாலி மாரியே வாவா. (7)

அங்கம் குறைந்துநல்ல அவதிகள்படும் ஏழையை
ஆதரித்தாளும் தேவியே கரிகாலி நகர்
அன்பாக ரக்ஷிக்க வாவா. (8)

சோலைசூழ் வாவியுடன் சுற்றுமதிலி னுள்ளே
சுகமாக வாழு மாரியே கரிகாலி நகர்
சூழும் பாலரைக் காக்கவா. (9)

அண்டையி லுள்ளபேரை அனைவரை காத்தமாரி
ஆதரித்தாளு மம்மணி கரிகாலி நகர்
அன்பாகக் காக்க வாவா. (10)

நன்மையாய் வரந்தந்து நலமாகக் காக்கவேணும்
நங்கையே மாரியம்மையே கரிகாலி நகர்
அம்மையே லோக நாயகி. (11)

பாடினேன் பிழைபொறுத்து பார்த்து ரக்ஷிக்கவேணும்
பாங்கான கந்த னனம்மா மேட்டு நகர்
பாலரைக் காக்கவேணு மம்மா. (12)

நோண்டிச் சிந்து.

தத்தினம் தான தானனா—தானனா
தத்தி நித்த நித்த தானம்—தான தானனா.

925:4? N3

சீர்பெருகும் கரிகாலி – மாரியம்மன் – சிறப்புகளை சொல்லி வாரேன் பாரின் மீதிலே — உலகத்தில் மாரியுண்டு–இந்த–வுத்தமி சக்திகளை மெத்தவும் சொல்வேன் — காசி தேசம் இந்தியா – இந்தக் – காட்சிபெரும் கரிகாலி மாரியம்மன் — ஆதிசத்தி பெண்மாரி – அவள் – அழகான சிரமதில் ராக்கடி குஞ்சம் — நெற்றி பொட்டுமூக் கத்தியுடன் – புலாக்கு – நேர்மையான காதினாலே மாட்டலுடனே — கழுத்துசரம் மாலை பூண்டு – பலபல – கனத்ததொரு நகையுடன் ஒட்டியாணம்— பாதசரம் பளபளென்ன – அம்மனுக்குப் – பட்டுச்சேலை ரவிக்கையுடன் திட்டமாய் பூட்டி — மல்லிகைப்பூ முல்லையுடனே – ரோஜா – மலருடன் சரங்களைப் பூட்டியமைத்து — தூபதீப நைவேத்தியம் – அபிஷேகமுடன் – துரிதமாய் செய்து நமஸ்காரஞ்செய்தால் — கேட்டவரம் தந்திடுவாள் – யாவர்க்கும் – கிருபையுடன் மனமிரங்கிப் பார்த்திடுவாள் — கூன் குருடு செவிடுக ளெல்லாம் – மாரியம்மன் – குணப்படுத்தி யனுப்பி விட்டாள் பாரின் மீதினிலே — என்னகலி காலத்திறமை – என்றுஜனம் – எத்தனையோ பேர்கள்வந்து பூஜைகள் செய்தார் — கண்டு மனம் மகிழ்ந்தார்கள் – அங்கே – கைகூப்பித் தெண்டனிட்டுத் தொழுதார்கள் — இவ்வித மாரிதனக்கு – கொஞ்சகாலம் – இருபூஜை இல்லாம லேங்கியே நின்றாள் — ஆயிரம் தொளாயிரத்து – பதினேழு – ஆண்டினில் மேமாதம் பதினேழில் — பாரிதிரு நாள்நடத்த – எல்லாரும் – மகிழ்ச்சியாய்க் கூப்பிட்டுக் கோயில் புக — வீண்வழக்கு வம்புகள் வந்து – கலகங்கள் – வெகுசாக நடந்து கொலை புரிந்து —

போலீஸார் கோர்ட்டிலும் – வழக்குகள் – புண்படவே காசு களைச் செலவழித்து — அன்று முதல் மாரிதேவியும் – வன வாசம் – ஆனபின்பு பதின்மூன்று ஆண்டுமாச்சு — அக்ஞாத வாசம் தாண்டி – மாரியுமிப்போ – அவள்வீடு வந்து சுகமாக அமர — அதன்தேகம் புழுங்கியம்மன் – அவள் – அடையாள மிட்டுக் கொண்டாள் பல நிறமாய் — அபிஷேக ஆராதனை யால் – மாரியம்மன் – அமரிக்கை யாகசுக மானதுபற்றி — அனைவரும் ஒத்துமையாக – இவ்வருடம் – ஆனந்த திருவிழா நடத்திடுவார் — என்று பலர் கூறுகிறார் – இங்கு – இன்ப மாய்ப் பார்த்துமனம் மகிழ்வீர்க்ள் — பால்பெருகி செல்வ முடன் – மாரியும் – பத்தினியும் காத்திடுவாள் நித்தமும்வந்து —வல்வினையை யோட்டிடுவாள் – மாரி – வந்தவந்த பிணிகளை நீக்கிடுவாள் — சக்தியிவள் மாதாவே – இவள் – சகலர்க்கும் மோக்ஷத்தைத் தந்திடுவாள் —உற்சவ மூர்த்தியிவள் – இவ் வருடம் – உற்பத்தியாகி நடந்து வாராள் — அச்ச மில்லை பயம் வேண்டாம் – யாவரையும் – ஆதரித்துக் காத்திடுவாள் மகமாயி — நன்று என்று கேட்டவர்கள் – படித்தோர்கள் – நங்கையுடன் சுகமாக வாழ்ந்திடுவீர் — என்றுமிக மேட்டு நகர் – டீச்சரும் – இயற்றினார் கந்தர்மிக மகிழ்ச்சியாக.—(த)

கரிகாலி மாரியம்மன் கும்மி.

கும்மியடி பெண்கள் கும்மியடி
குருபாதம் காணவே கும்மியடி
நம்மையாளும் விநயகர் பாதத்தை
நாடிக்கும்மி யடியுங்கடி. (1)

அச்சுநடையாம் பெருச்சாளி அய்யன்
அதன்மேல் கணபதி யெழுந்தருள
உச்சிதமான மாரியம்மனை
உகந்து கும்மி யடியுங்கடி. (2)

ஆதியில்சத்தி மாரியிவ ளெங்கும்
அன்பாக காத்திட எழுந்தருளும்
சோதிசிவ ரூபமாரியிவளை
சுற்றிவந்து கும்மி யடியுங்கடி. (3)

இந்தியர்கோவி லெங்குமுண்டு இவள்
இல்லாத ஊர்களு மில்லையடி
தந்தையைப்போல காத்திடுவா ளிவள்
தாயாரைநாடி கும்மி யடியுங்கடி. (4)

ஈஸ்பரி யாமிவள் காசிவி சாலாக்ஷி
எவ்வுயிர்க்கும் சக்தி தந்திடுவாள்
தாசனைப் போலவே பாசமுடை யோரைத்தன்
கையா லணைத்துக் காத்திடுவாள். (5)

உண்ண உடுக்கவும் பூணவும் தந்திடும்
உத்தமமாரி தனைநாடி
கண்ணியமாகவே நடந்தாலே உயிர்
காத்து ரக்ஷிப்பாள் திண்ணமிதே. (6)

ஊரெங்கும் நாடெங்கும் காத்திடுவாளிந்த
உத்தமிபாதம் தனை நினைந்தால்
யாரென்றும் ஜாதிபேத மில்லாதமே தோர்
யாத்திரை மாரியை நாடியடி. (7)

எல்லைக்குள் இருக்கும் நல்லமேதார் பாலரை
எடுத்துக் காத்திடும் மாரியிவள்
நல்லமேதார் பாலர்கள் வல்வினை போகவே
நாடிக்கும்மி யடியுங்கடி. (8)

ஏசலே கேட்டுமே மோசம் செய்யமாட்டாள்
எல்லோரும் வாங்கடி ஆசையுடன்
ஆசையதாகவே நேசமுடனே யன்பாகக்
கும்மி யடித்திடுவோம் வாருங்கடி. (9)

ஐங்கர னம்மனும் ஆதரிப்பா ளென்று
அநேக பேர்களும் சொல்லிவாரார்
சங்கை யிலாபமேல மங்கையரே வாடி
சாய்ந்துக் கும்மி யடித்திடுவோம். (10)

ஒத்தைகல் நத்து பிலாக்கு பேசரி
ஒட்டியாண லக்ஷணம் பாருங்கடி
எத்திசையும் ஜொலிக்கும் சத்தி பதக்கத்தை
எல்லாரும் பார்த்துக் கும்மி யடியுங்கடி. (11)

ஓலமாட்டல் ஜிமிக்கை குருடு கர்ணப்பு
உயர்ந்ததோர் கொப்பி னழகைப்பாரு
சீலமிலா காசுமாலே குண்டுகாரை
சிறப்பான செயின் மின்னுதுபார். (12)

ஔவையும் பார்த்தாள் இவ்வித கங்கண
அழகானபாத சரங்காப்பு
எவ்விதமான பாலர்க ளுங்கூடி
ஏற்றிக் கும்மி யடியுங்கடி. (13)

கரியாலி வாழும் மாரியர்க்கு நல்ல
கற்கட்டு மதிலுடன் மண்டபமும்
சரியான கேணிமுன் வேம்புவினயகர்
சகலரும் பார்க்க கும்மியடி. (13)

அம்மை யிடது புரமாக நல்ல
அலங்காரமான மணியினேசை
இன்பமாய் மருதையான் குதிரைவாகனம்
இரும்புவேலி யழகைப்பார். (14)

தென்பாக ரெத்தின அழகைப்பாரு அங்கு
திரள் திரளான படுகளம் பார்
அன்பர்கள் கோரிக்கை பூந்தேரும் இன்னும்
அழகான வேடிக்கை பாருங்கடி. (15)

தென்வடல் ரோட்டினில் தண்ணீர் பந்தலின்
சிறப்புகள் சொல்லுவேன் பாருங்கடி
என்ன அழகுபார் எத்தனை ஜோருபார்
எங்கும் நிறைந்த தண்ணீர் பந்தல். (16)

வாழைக் கமுகுகள் தென்னை குலைகளும்
வந்திடும் ஈச்சங்காய் பனங்காயும்
தாழங்காயுடன் வாழைப் பழங்களும்
சரஞ்சர மாகவே தொங்குது பார். (17)

எட்டுகட்டுடன் பதினாறு கோணமாய்
எழுந்திடும் பந்தலி னுள்ளாக
வாட்டமான தேவபடங்களுடன் இங்கு
வாத்திய பஜனை செய்வதைப் பார். (18)

செல்வமானமாரி எல்லைக்குள்ளே இன்னும்
சிறப்பான கடைகளை யென்ன சொல்வேன்
நல்லதோர் புஸ்தக ஷாப்புடன் வெண்கல
நாகரீகக் கடையைப் பாருங்கடி. (19)

நண்பராம் மேட்டு நகர்வாழும் டீச்சர்
நவிலும் கும்மி பாடிவந்தேன்
அன்பர்களா குற்றம் தான்பொறுத்து மாரி
அத்தனை பேர்களும் வாழ்கவேதான். (20)

ஆண்டிப் பண்டாரம் என்ற மெட்டு.

மாரியம்மனே உனை—கோரி வந்தேனே.

1 சீர்மறை முதலாய் செல்வர்களை காத்தவளே
பாராயோ எங்கள்மனம் பாதைவழி காட்டிடாயோ (மா)

2 தீராதி தீரர்களை திருஷ்டியினால் பார்த்தவளே
சீராக பாலரையும் சிறப்பாகக் காத்தவளே. (மா)

3 ஆயிரம் கண்ணுடைய ஆதிசத்தி பொன்மாரி
தாயாராய் நீயிருந்து தயவுடனே காத்திடுவாய். (மா)

4 காயாம்பு மேனியளே கரிகாலி மாரியரே
தாயாக வந்திருந்து தற்காக்க வேணுமம்மா. (மா)

5 கோசலைக்கும் கிருஷ்ணனுக்கும் கூட்டிவைக்க நின்றவளே
கூசாமல் எங்கள்மனம் குடியிருக்க வேணுமம்மா. (மா)

6 மஞ்சளுடன் வேப்பிலையை மகிழ்ச்சியுடன் தரித்தவளே
அஞ்சாமல் பாலரைநீ ஆதரிக்க வேணுமம்மா. (மா)

7 பொல்லாத எமனையும் பூமியிலே தாங்குதற்கு
அல்லல்கள் பட்டதொரு அம்மையரே நீயருள்வாய். (மா)

8 கண்மணி பாலர்களை கண்ணாலே பார்த்தருள்வாய்
வண்மையுள்ள மாரியரே இன்பமுடன் நான்பணிவேன்.

9 பூஞ்சோலை வாவிகளும் புதுக்கிணறும் சாவடியும்
சாஞ்சாடும் மண்டபத்தில் சகலரையும் காத்தவளே. ()

10 கரிகாலி நகரில்வளர் கன்னபுரி மாரியரே
கண்மணி பாலர்களை காப்பதுந்தன் பாரமம்மா. (மா)

அன்பர்களே!

கர்மரோய் தவிர மற்ற எவ்வித வியாதிகளுக்கும் அடியில் கண்ட விலாசதாரரிடம் அவிழ்தம் கிடைக்கும். ஆனால் வியாதியஸ்தர் வயது, ஆணு பெண்ணு, உண்டான காலம், வியாதியின் குணம் இவைகளை விவரமாய் தெரிவிக்கவும்.

ரிப்ளை எழுதினால், உடனே பதில் தெரிவிக்கப்படும். சமூல வஸ்துக்களிலே அவிழ்தம் தயாரிக்கப்பட்டிருக்கிறது. எவ்வளவோ பேர்கள் நற்சாக்ஷி அளித்திருக்கிறார்கள்.

விலாசம்—**M. V. கந்தசாமி அய்யர்,**
நேடிவ் டாக்டர், மேட்டுப்பாளையம்,
முசிரி தாலூகா, திருச்சி ஜில்லா.

இந்தியன் சக்கிமுக்கி ஆயில்.

1008 வியாதிகளுக்குமேல் அநேக கொடிய அபாய விபத்துக்களுக்கும், விஷக்கடி, வெட்டுக் காயம், பற்பல ரண வியாதிகளுக்கும், பல அபமிர்த்துவிற்கும் மேல் பிரயோகமாக தடவ சகல வியாதிகளும் உடனே மாறும்.

1 அவுன்ஸ் பாட்டில் 1-க்கு விலை		ரூ. 2-0-0
¼	௸ ௸	,, 0-8-0

ஒவ்வோரிடங்களிலும் சோல் ஏஜண்டுகள் தேவை. மற்ற விபரங்களுக்கு நேரில் எழுதித் தெரிந்துகொள்ளலாம். வியாபாரிகளுக்குத் தக்க கமிஷன் கொடுக்கப்படும்.

வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

கோ. கோவிந்தராஜுலு செட்டியார்,
மளிகை & ஷாப், துறையூர் (திருச்சி ஜில்லா).